THE HON THIRU S. RAMACHANDRAN : Sir, one of the fleet operators has gone to the Supreme Court and the matter is pending before the Supreme Court. This is the list of other fleet operators who have voluntarily handed over to the Government.

திரு. வே தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்துகள் பயன்படுத்திய ஒர்க்ஷாப்களை அரசாங்கம் கையகப் படுத்தியிருக்கிறதா ? அல்லது அந்த ஒர்க்ஷாப்களை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்துகளைக் கையகப்படுத்தும் சட்டத்தில், முழுவதுமாக பேருந்துகளுக்காகப் பணி மனைகளைப் பயன்படுத்தியிருந்தால், அவற்றை மேற்கொள்ளலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. ஆகவே, சில நிறுவனங்களிடமிருந்து பணிமனைகளைப் பெற முடியவில்லை. இருந்தாலும், இந்தப் பொள்ளாச்சியிலே உள்ள ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்கள் பணி மனையைத் தாங்களாகவே கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்துகளைக் கையகப்படுத்தும்போது, அவைகளுக்கு எதாவது நஷ்ட ஈட்டுத் தொகை—கொஞ்சமாவது கொடுக்கப்பட்டதா ? முழு மையாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்க இயலும்.

State Transport buses to Tirumalai Hills.

* 288 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be please to state:

(*a*) whether the State Transport Buses are to go to Tirumalai Hills in Andhra State;

(*b*) if so, whether any arrangements have been reached by the State Government with the Andhra Government ; and

(*c*) if so, the deails thereof ?

[1972 நவம்பர் 13

திருமலைக்குச் செல்ல தமிழ்நாடு அரசு போக்குவரத்து பேருந்துகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துப் பேருந்துகள், ஆந்திர மாநிலத்திலுள்ள திருமலைக்குச் செல்லவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், இது குறித்து தமிழ்நாடு அரசு ஆந்திர அரசுடன் ஏதாவதேனும் ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழக அரசு போக்குவரத்துத்துறை பேருந்து வண்டிகளை திருமலைக்குன்றுகள் வரை ஓட்டிச் செல்வதற்கு ஒரு செயற்குறிப்பு இருக்கிறது.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கண்ணமங்கலத்தில் காவல் துறையினரால் விளைவிக்கப்பட்டிருக்கும் பீதி நிலைமையையும், விருத்தாசலம், போடிநாயக்கனூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள நிலைமையையும் குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற விதிகளின் 44-வது விதியின் கீழ் திரு. எல். பலராமன், எம்.எல்.சி., அவர்கள் பின்வரும் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார். அதாவது :—

" to discuss the unprovoked terror leashed out on the inhabitants in Kannamangalam by the Police entering into the private houses and beating the inmates therein and the similar incidents in Vridhachalam, Bodinayakanur and Ramanathapuram and the death of two persons one in Kannamangalam and the other in